17 மடத்துக்குளம் .. 21-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

18 திருப்பூர் .. .. 13-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கபடட்டுள்ளது.

19 பொங்கலூர் .. 17-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

20 பல்லடம் .. .. 20-4-1989ல் ஊதியம் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் தங்களிடம் எழுதிக் கொடுக்கப்பட்டபோது அந்த சம்பந்தபபட்ட அதிகாரி களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. இப்போது எடுத்துக் கொள்ளப்படுகிற போது விவர அறிக்கையில் சமபளம் கொடுக் கப்பட்டதாக சொல்லப்படுகிறது. எனவே சம்பளம் கொடுப் பதில் இருக்கக் கூடிய கால தாமதத்தைத் தவிர்த்து, இதுபோன்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்களை இனி கொண்டு வருவதையும் தவிர்க்கின்ற விததிலே, அரசு முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே உள்ளாட்சித்துறை மூலம் ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அதை ஏற்றுக் கொண்டு, சம்பளம் நாம் வழங்குவதா, அல்லது அந்தத் துறை வழங்குவதா என்று இரண்டு துறையுமே பரிசீலித்துக் கொண் டிருந்த காரணத்தால் சற்று கால தாமதம் ஆகிவிட்டது. இடை யில் 21 ஆம் தேதி எல்லோருக்குமே அந்தச் சம்பளம் வழங்கப பட்டு விட்டது. எனவே ஏறத்தாழ 20 நாட்கள் கால தாமத மானது. இனிமேல் அது தவிர்க்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொளகிறேன்.

(ஆ) நன்னிலம் மருத்துவமனையில் தண்ணீர் தொட்டி இன்மையாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் எற்பட்டுள்ள இடர்பாடுகள்

திரு. மா. மணமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், நன்னிலம் மருத்துவமனையில் ஆறு மருத்துவர் பணியாற்றிய நிலையில் இன்று பெண் மருத்து

வரும் இல்லாமல் இரண்டே மருத்துவர் மட்டும் வேலை செய்வ தால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினையும், அம் மருத்துவ மனையில் தண்ணீர் தொட்டி இயங்காததாலும் ஏற் பட்டுள்ள இடர்பாடுகளையும் குறித்த'' அவசரப் பொது முக்கி யத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுற் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு, ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடங்கள் ஆறு. அங்கு இரண்டு உதவி மருத்துவர் மட்டும் பணி புரிந்து வந்தனர். உதவி மருத்து வர்கள் பற்றாக்குறை காரணமாக உதவி மருத்துவர்கள் பணி யமர்த்த முடியவில்லை. தற்பொழுது பட்ட மேற்படிப்பு முடித்து வந்த மருத்துவர்களில், மூன்று ஆண் உதவி மருத்துவரும், ஒரு பெண் உதவி மருத்துவரும் முறையே 8-3-1989, 27-3-1989 மற்றும் 28-3-1989 தேதிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்கள் பணியில் விரைவில் சேருவார்கள். தண்ணீர் தொட்டி இயங்க மருத்துவப் பணி மற்றும் குடும்பநல இயக்குனரால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் மூன்று மருத்துவர்கள்தான் பணியிலமர்த்தப்பட்டதாய் இருக்கிறது. எனவே அதில்கூட இன்னும் ஒரு மருததுவர் பாக்கி இருக்கிறது. இந்த நான்கு மருத்துவர்களும் ஏறத்தாழ 6, 7 மாதங்களாக அந்த மருத்துவ மனையில் பணியாற்றாத காரணத்தால், அது வட்டத்தின் தலைமை மருத்துவமனையாக இருக்கின்ற காரணத்தால் மிக இடர்பாடுகள் வந்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற நோயாளி கள் எல்லாம் மிகவும் அவதிப்பட்டார்கள். எனவே இதுபோன்ற நிகழ்ச்சி மேற்கொண்டும் நிகழாமல், மருத்துவர்கள் பயிற்சிக்கு சென்றுவிடுகின்ற ஒரேயொரு முக்கிய காரணமாக கருதப் படாமல், அப்படி பயிற்சிக்குச் செல்கின்ற நேரத்தில் 'சப்ஸ் டிட்யூட்'' மருத்துவர் நியமித்து, அவர்களை விடுவிப்பதற்கு

1989 மே 4] [திரு. மா. மணிமாறன்]

அரசு முன்வருமா என்பதோடு தொடர்ந்து அந்தத் தவறுகள் நிகழாமல் ஏனைய பணிகளையும் பார்ப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி தலைவர் அவர்களே, உறுப்பினரவர்கள் இதைச் சரியாகப் புரிந்துக் கொள்ளாமல் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருடைய கேள்வியிலேயே முதலில் 2 மருத்துவர்கள் அங்கே பணியாற்றுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் மூன்று ஆண் உதவி மருத்துவர்களும், ஒரு பெண் உதவி மருத்துவரும், ஆக நான்கு மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மொத்தம் அறுவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சேராமல் இருப்பார்கள் என்று சொன்னால், மீண்டும் அவர்கள் நியமிக்கப்படுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–40).

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களை நியமித்து விடுவார்கள். ஆனால் அவர்கள் அந்தப் பணியிலே சேர்ந்து விட்டார்களா இல்லையா என்பதை நாம் அறிய வேண்டும். பலர் 3 மாதம் 4 மாதம் என்று விடுப்பிலே சென்று விடுகிற காரணத்தால், பணியில் அமர்த்தப் படுகிறார்களே தவிர, விடுப்பிலே செல்கிறவர்களுக்கு ஈடாக மருத்துவர்கள் இல்லை. அது மட்டும் அல்லாமல் அது ஒரு வட்ட தலைமை மருத்துவமனையாக இருக்கிறது. அங்கே தண்ணீரே இல்லாமல் 7, 8 மாதங்களாக கழிப்பிட வசதி, வார்டுக்குத் தண்ணீர், ஆப்பரேஷன் தியேட்டர் போன்றவைகளுக்கு தண்ணீர் இல்லாமல் மிக மோசமானநிலையில் அவைகள் எல்லாம் கெட்டுப் போயிருக்கின்றன. எனவே ஒரு மருத்துவமனையில் 6 மாத காலமாக தண்ணீர் இல்லாமல் இருக்கும் நிலை சரியாக இருக்குமா என்பதைப் பரிசீலித்து அப்படிப்பட்ட நிலைக்கு வர யார் தவறு செய்கிறார்களோ, அப்படி வேலை செய்யாதவர்களுக்கு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வரசு இதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானங்கள்.

(அ) கோவை பாரதியார் பல்கலைக் கழகப் பேரவைக்கு (Senate) உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்:

1. திரு. இரா. மோகன்,
2. திரு. கே. ரமணி.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(ஆ) திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகப் பேரவைக்கு (Sen te) உறுப்பினர்கள் தேர்வு—:

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பேரவைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலிருந்து கீழ்க்கண்ட இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் :

1. திரு. அ. பெரியண்ணன்.
2. திரு. அன்பில் பொய்யாமொழி."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS